25 ஆகஸ்ட் 2024
பொதுக்காலம் ஆண்டின் 21 ஆம் ஞாயிறு

NEW WAY OF BEING CHURCH
newbec

## மண்ணுலகிற்கு உப்பும் உலகிற்கு ஒளியும்:

ஆன்மீக ஒன்றிப்பில் பங்குகொள்ளும் உணர்வோடு தூதுரைத்தல், கொண்டாடுதல் மற்றும் செவிமடுத்தல் (மத்தேயு 5: 13-16)

மாதாந்திர கருப்பொருள்
பணியாளர் தலைமைத்துவம்



# தலைமைத்துவத்தில் விடாமுயற்சி

இன்றைய முதல் வாசகத்தில் யோசுவா இஸ்ராயேல் மக்களின் அனைத்துக் குலங்களையும் ஒன்றுகூட்டி அவர்கள் முன் விருப்பத்தை வைக்கிறார். யாருக்கு நீங்கள் ஊழியம் செய்வீர்கள்? இதனுடைய உட்பொருள் மிகவும் தெளிவாக உள்ளது. உங்கள் வாழ்நாள் முழுவதும் கடவுள் முன்னிலையில் அவருக்கு ஊழியம் செய்வது, அவருடைய வழிகளைக் கடைப்பிடிப்பது. இன்றையக் காலக்கட்டத்தில் அத்தகைய உறுதிமொழியை எடுக்க நாம் அஞ்சுகிறோம். நாம் எதைச் செய்தாலும் நமக்கென ஒருவழியைக் கடைப்பிடிக்கிறோம்.

Image https://www.freepik.com/author/stories/7#uuid=cf9690bf-89b6-49a4-97bb-e128d10dd306

அப்போது செயல்கள் கடினமாகிவிட்டால், கேலி செய்யபப்பட்டு, அல்லது நிராகரிக்கப்படும்போது, நாம் அதை விட்டு விலகிசெல்கிறோம்.

இயேசுவின் காலத்தில் நானே உண்மையான அப்பம் என்று இயேசு கூறியபோது, அவரது வார்த்தைகளை ‘ஏற்றுக்கொள்ள முடியாமல்’ அவரை விட்டு பலர் விலகிச்சென்றனர். நோயாளிகளை குணமாக்கவும், தீயசக்திகளை விரட்டவும், ஆயிரக்கணக்கானோருக்கு உணவளிக்கவும் அவரால் கூடும் என்று அவர்கள் அக்கறை கொள்ளவில்லை. அவர்களின் நம்பிக்கைக்கும் எண்ணங்களுக்கும் இயேசு சவால் விடுத்தபோது, அவரை அவர்களுடைய மெசியாவாக ஏற்றுக்கொள்வதை விரும்பவில்லை. இன்று நாம் அனைத்துவிதமான காரியங்களையும் ஏற்றுக்கொள்ள முடியாதென எண்ணுகிறோம். நீண்ட மறையுரை, ஆலயத்திற்கு செல்பவர்களின் ஒழுக்கேடான செயல்கள், பழமையான நன்னெறி போதனைகள், மற்றும் பல. சீடர்களைப் போலவே இந்த செயல்கள் நமக்கு ஏற்றுக்கொள்ளமுடியாதவை என்று முடிவு செய்து, நமக்குப் பொருத்தமான சூழலைத் தேடி விலகிச் சென்றுகொண்டிருக்கிறோம்.

இருந்தபோதும், இயேசுவின் வார்த்தைகள் மக்கள் மத்தியில் அதிகம் பேசப்படாவிட்டாலும், அவை உண்மையில்லை என்று அர்த்தமல்ல; கேட்பவர்களுக்கு எவ்வளவு ‘ஏற்றுக்கொள்ள முடியாமல்’ இருந்தாலும் அதைத் தெரிந்து தான் அவரின் மறுமொழியைக் கேட்டவர்களுக்கு அவர் உண்மையைப் பேசினார். நிராகரிக்கப்பட்டாலும் அவர் இன்னும் மெசியா தான், அன்பு செய்வதும், தம் வாழ்வைக் கையளிப்பதும் தான் அவரின் தூதுரை என்று தெளிவாக அறிந்திருந்தார். நமக்கிருக்கும் குறைவான அனுபவமும் புரிதலும் புதிய எண்ணங்களை ஏற்றுக்கொள்ள கடினமானதாகத் தான் இருக்கும். ஆனாலும் நம்முடைய அழைப்பு, சீடத்துவம்; கற்றுக்கொள்வது, தேர்ந்து தெளிவது மற்றும் உண்மையாகவே பணி செய்யும் தலைவர்களாக திகழும் புனிதமான சூழலை உருவாக்குவது.

அவரைப் பின் தொடர்ந்தவர்கள் அவரை விட்டு விலகியபிறகு, இயேசு தம்முடைய நெருங்கிய சீடர்களிடம் “நீங்களும் என்னை விட்டு போய்விட நினைக்கின்றீர்களா? என்னும் கேள்வியைக் கேட்டார். நம்மிடமும் இதே கேள்வியைக் கேட்டுக்கொள்வோம். ஏற்றுக்கொள்வதற்கு கடினம் என்று நினைக்கும் தருணத்தில் நாம் இயேசுவைப் பின்பற்றுவதை நிறுத்திவிடுவோமா? அல்லது இயேசுவின் நெருங்கிய சீடர்களைப் போல இயேசுவால் மட்டுமே நிலைவாழ்வைத் தரமுடியும் என்று உணர்ந்துகொள்வோமா?

யோசுவா மற்றும் சீமோன் பேதுருவோடு இணைந்து, நாமும் சொல்வோம் “ஆண்டவருக்கே ஊழியம் செய்வோம்”, நிலைவாழ்வு அளிக்கும் வார்த்தைகள் உம்மிடம் தானே உள்ளன”.

**உலகம் உங்களுக்கு ஆறுதலை உறுதியளிக்கிறது ஆனால் ஆறுதலுக்காக நீங்கள் உருவாக்கப்படவில்லை. நீங்கள் மாபெரும் பெருமைக்காக படைக்கப்பட்டீர்கள்**

திருத்தந்தை 16 ஆம் பெனெடிக்ட்




### இன்றைய இறைவார்த்தை:

யோசுவா: 24: 1-2, 15-18

திபா: 34: 2-3, 16-23

எபே: 5: 21-32

யோவான்: 6: 60-69

INTERNAL CIRCULATION ONLY
BUL 34/2024

**Published by:** Archdiocesan Pastoral Institute (API) | **Email:** api@archkl.org